**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாள் திங்கள்கிழமை

**இடைநிலை மனு எண். 3/2023-ன் அசல் வழக்கு எண்.6/2019**

பெருமாள் ..மனுதாரர்/வாதி

/எதிர்/

பழனி .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 09.08.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திகேயன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. குணசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151-ன் கீழ் இடை மனு எண் 1/2023 நகல் கிடைத்து மேல்முறையீடு செய்யும் காலம் வரை வழக்கை நிறுத்தி வைக்க உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

**2. மனு சுருக்கம்:**

மனுதாரர் இம்மனுவில் வாதி. தாவா சொத்திற்கு அருகில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் மூல ஆவணங்களை விட அதிகப்படியாக அளவுகள் போடப்பட்டு ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கும் பொருட்டு ஏற்கனவே இடை மனு எண் 2/2023 தாக்கல் செய்து அதனுடன் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் மனுதாரர்/வாதியாகிய தன்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதி அளிக்க வேண்டி இடை மனு எண் 1/2023 தாக்கல் செய்திருந்தார். அந்த மனு செலவுத் தொகையுடன்

தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் மேற்கொண்டு சாட்சியத்திற்கு வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்படி உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்ய உள்ளதால் நகல் கோரி தாக்கல் செய்துள்ளார். நகல் இன்னும் மனுதாரருக்கு கிடைக்கப்பெறவில்லை. நகல் பெற்று மேல்முறையீடு செய்யும் வரை இந்த வழக்கை நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே இம்மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதி முற்றிலும் பொய்யானதாகும். மனுதாரர் வழக்கை காலதாமதம் செய்து விசாரணை செய்யாமல் தவிர்ப்பதற்காக மட்டுமே மேல்முறையீடு நடவடிக்கை எடுத்து வருகின்றார். மேற்படி ஆவணத்திற்கும் மனுதாரரின் தாவா பரிகாரத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. மனுதாரர் மேற்படி தாவாவில் வாதி என்பதை மறந்து பிரதிவாதியின் சாட்சியத்திலிருந்து வாதியின் தாவாவை நிரூபிக்க வேண்டுமென்று பிரதிவாதி கிரையப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணத்தின் தரப்பினருக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இம்மனுவில் குறிப்பிடவில்லை. அந்த ஆவணத்தின் தரப்பினரான நபர்களை சாட்சியாக விசாரித்தால் தான் சரியானதாக இருக்கும். அந்த ஆவணத்தின் தரப்பின்ா அல்லாத ஒருவரை சாட்சியாக விசாரிக்காமல் மனுதாரரை சாட்சியாக விசாரிக்க தாக்கல் செய்த மீள்திறவு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீடு செய்வதற்கு நகல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைமனுவில் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கான காரணமும், எந்த நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப் போகின்றார் என்ற விவரத்தினையும் மனுவில் குறிப்பிடாமல் மனுதாரர் மேம்போக்காக மூல தாவாவை விசாரணையில் நிறுத்தி வைக்க வேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் எந்தவித முகாந்திரமும் இல்லை. எனவே இம்மனுவை செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இடைமனு எண் 2/2023ன் பேரில் மேல்முறையீடு செய்ய உள்ளதாகவும் எனவே வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க

வேண்டுமாறும் இம்மனு தாக்கல் செய்திருப்பதாகவும், தற்போது தள்ளுபடி செய்யப்பட்ட மனுவின் நகல் கிடைக்கப்பெற்றதாகவும், சாட்சிய விசாரணை செய்ய வேண்டி கட்டளை 16 பிரிவு 1(3)ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே அதன் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறும் வாதிட்டார்.

6. மேற்சொன்ன சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுவில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்றும், நகல்களும் மனுதாரர் பெற்றுவிட்டார். மேல்முறையீடு செய்யும் காலம் வரை இவ்வழக்கினை நிறுத்தி வைக்க கோரியுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறும் வாதிட்டார்.

7. இம்மனுவில் தற்பொழுது தீர்மானம் செய்யவேண்டியது மனுதாரரின் மனு, அனுமதிக்கப்படக்கூடியதா? என்பதே ஆகும். இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

8. <u>**தீர்வு.**</u>

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது, மனு, பிரமாண வாக்குமூலம், எதிருரைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் தள்ளுபடி செய்யப்பட்ட இடைமனு எண் 2/2023ல் நகல்கள் கிடைத்து மேல்முறையீடு செய்யும் காலம் வரை இவ்வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்குமாறு மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் மேல்முறையீடு செய்யும் காலம் வரை இவ்வழக்கினை நிறுத்தி வைக்க இயலாது என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகள் ஆராயப்பட்டது. வழக்கு கோப்புகளை ஆராய்கையில் இடைமனு எண் 2/2023 தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் வழக்கு கோப்பிற்கு பெற்றுக்கொள்ள மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவ்வாவணங்களின் தரப்பினராக இல்லாத மனுதாரர்/வாதி ஆவணங்களை குறித்து தன் மூலம் குறியீடு செய்ய தன்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய இடைமனு எண் 1/2023 தாக்கல் செய்யப்பட்டு அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவின் நகலை தான் பெற்றுள்ளதாகவும் ஆவணத்தின் தரப்பினரை விசாரணை செய்ய கட்டளை 16 விதி 1(3)ன் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

9. மேலும் மேல்முறையீடு மனுதாரர் செய்யும் காலம் வரை இந்த வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்கக் கோரி இம்மனுவில் கூறியுள்ளார். அதற்கான வழிமுறைகள் சட்டத்தில் இல்லை. பிரிவு 151 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் படியாக வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க இயலாது. மேற்படி பிரிவின் மூலம் சட்டத்தல் துஷ்பிரயோகம் செயல்முறையின்போது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் குறிப்பிட்டு சொல்லப்படாத விதிகள் மற்றும் பிரிவுகள் குறித்து நீதிமன்றத்தின் விருப்புரிமை பயன்படுத்தலாம் அன்றி வேறு எதற்கும் மேற்படி பிரிவினை பயன்படுத்த இயலாது. மேலும் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட இடைமனு எண் 1/2023ல் கண்டுள்ள உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரர் இந்நீதிமன்றத்தில் சாட்சிய விசாரணை செய்ய அனுமதி அளிக்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்றும் நீதியின் நலன்பால் இம்மனு தள்ளுபடிக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்வதோடு மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர்கள் அவரவர்களே செலவுத் தொகையை ஏற்க வேண்டும்.

**இறுதியாக,** இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**

-இல்லை-

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**

-இல்லை-

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.